நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை தோற்றம் - 14.09.1901

செந்தமிழ்

பகுதி: 11
தொகுதி: 113
திருவள்ளுவர் ஆண்டு 2050

திங்கள் இதழ்
விலை: ரூ.20
நவம்பர் 2019

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
1867-1911

மன்னர் பாசுகர சேதுபதி
1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி**	தலைவர்
மருத்துவர் **ந.சேதுராமன்**	துணைத் தலைவர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	செயலாளர்
திருமதி.**இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	உறுப்பினர்
முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
பேராசிரியர் இரா.சதாசிவம்	உறுப்பினர்
வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	உறுப்பினர்
திரு. **துரை கருணாநிதி**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்

செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

வழக்குரைஞர் **ச.தசரதராமன்**	தலைவர்
திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி**	செயலாளர்
வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி**	உறுப்பினர்
பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி**	உறுப்பினர்
திரு. **அழ.சித்தையா**	உறுப்பினர்
திரு. **வி.சத்யநாராயணன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **து.மாயராசன்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **சு.சிவசாமி**	உறுப்பினர்
பொறிஞர் **லெ.சிவக்குமார்**	உறுப்பினர்
வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி**	உறுப்பினர்
திரு. **ஜெ.பாலதண்டாயுதம்**	உறுப்பினர்
முனைவர். **ம.லெல்லிஸ்திவாகர்** பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர். **கி.வேணுகா** முதல்வர் (பொ)	உறுப்பினர்
முனைவர். **கோ.சுப்புலெட்சுமி** துணை முதல்வர்	உறுப்பினர்
முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர்	உறுப்பினர்

பொருளடக்கம்

1.	இதழ் மணம்	- பேராசிரியர் இரா. சதாசிவம்	4
2.	சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா	- முதுமுனைவர் இரா. இளங்குமரனார்	7
3.	காப்பிய உவமைகள் - ஹோமர், மில்டன், சங்கச் சான்றோர்	- பேராசிரியர். ப. மருதநாயகம்	9
4.	இலக்கணவியல் - மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்	- பேராசிரியர். செ.வை. சண்முகம்	12
5.	உலகப் பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்	- முனைவர். உ. கருப்பத்தேவன்	22
6.	இளங்கோவின் உள்ளம்	- மு. இளங்கோவன்	33
7.	சங்க செய்திகள்		39

வலைத்தளம்

www.maduraitamilsangam.com
www.senthamilcollege.com

மின்னஞ்சல்

secretarymaduraifourthtamilsangam@maduraitamilsangam.com
maduraitamilsangam@yahoo.co.in
principalsenthamilcollege@yahoo.co.in

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ.200	ரூ.1,000
ஆயுள்கட்டணம்	ரூ,3,000	ரூ.10,000
புரவலர் கட்டணம்	ரூ.10,000	ரூ.20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ.20	

இதழ் மணம்

பேராசிரியர் இரா.சதாசிவம்

அண்மையில், 'இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்' என்னும் நூல் குறித்த ஆய்வு அரங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. பேராசிரியர் செ.வை.சண்முகம் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து திறனாய்வுக் கட்டுரை ஒன்றும் வழங்கினார். அக்கட்டுரை இந்த இதழிலும் அடுத்த இதழிலும் இடம் பெறுகிறது.

உலகம் முழுவதும், மொழி கற்பித்தல் என்பது மாணவர்களுடைய சிந்தனையைக் கூர்மைப்படுத்தி, அறிவு ஆராய்ச்சி சார்ந்த சிந்தனைப்பள்ளியாக, அறிவியல் பார்வையுடன் மாணவர்களின் பகுத்தறிவு சிந்தனை வளத்தை மேம்படுத்துவதாக மாற்றம் பெற்றுவருகிறது. தமிழ் மக்கள் பன்னெடுங்காலத்திற்கு முன்பே **'வழக்கும் செய்யுளும்'** என்று வழக்கை முதன்மைப்படுத்தி மொழியை உயிராற்றல் உடைய இயங்கு பொருளாகப் பார்த்திருப்பதைத் தொல்காப்பியத்தில் காணலாம். இலக்கண நூலிருந்து உரையாசிரியர்கள் தத்துவ நெறியை வெளிக்கொணர்ந்திருப்பதை வரலாற்றுப் பார்வையுடன் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். மூலநூலும் உரையாசிரியர்களும் மிகப்பழங்காலத்திலேயே இலக்கணம் ஒரு சமுதாயம் சார்ந்த வளர் நிலைப்படிமமாக மொழியை கருத்தாடல் என்னும் புரிதலுக்குரிய செப்பம் உடையதாகப் பார்த்துள்ளது குறிக்கத்தகும். இன்றைய மொழியியல் அறிஞர்களுடைய சிந்தனையோடு ஒத்திசைவு உடையதாக அமைந்திருக்கும் உண்மை, தமிழ் இலக்கணச் சிந்தனை, மேலை நாட்டு மொழியியல் அறிஞர்களின் சிந்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

உலக மொழிகள் அனைத்திற்கும் ஒத்திசைவுடையதாக மொழியியல் பார்வை மேல் சட்டமாக வளர்ந்து வருவதைச் சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். தொல்காப்பியர் காலம் தொடங்கி வழிவழியாக காலந்தோறும் ஏற்பட்டுள்ள சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப, மொழி மாற்றம் அடைந்திருப்பதைப்

பிற்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கண ஆசிரியர்கள் தத்தமது நூல்களில் எடுத்துரைப்பதும் தமிழ் இலக்கணம் பழையன கழித்துப் புதியன ஏற்று காலமாற்றத்தை எதிர்கொண்டிருப்பது மொழியின் இயங்காற்றல் என்பது நம்முன்னோர் கண்டமுடிவு. அதனை முறைப்படுத்தி இலக்கணம் செய்திருப்பதும் மரபு வழியாகப் பாதுகாத்தும் அவற்றை நமக்கு அளித்திருக்கும் பெருமை போற்றற்குரியது.

நூலாசிரியர் மொழியியல் அறிஞர் இராசாராம் பாராட்டுதலுக்குரியவர். கருத்தரங்கிற்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மு.கிருட்டிணன் நேரில் வந்து பேராசிரியர் செ.வை.சண்முகத்தைப் பாராட்டிப்பெருமை சேர்த்தார். இக்கருத்தரங்கு துறைத்தலைவர் இராமராசபாண்டியன் வழி நடத்தலில் சிறப்பாக அமைந்திருந்தது. பேராசிரியர்கள் உ.கருப்பத்தேவன், அறவேந்தன், சங்கரேசுவரி, சாவித்திரி ஆகியோரின் கல்வி சார்ந்த முயற்சியின் பங்களிப்புப் பாராட்டுக் குரியதாகும்.

மொழியியல் கருத்தரங்கு தொய்வின்றி வெற்றி பெறக்காரணமாக இருந்த பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். நம் நாட்டிலும் பிறபகுதிகளிலும் மாணவர் ஆசிரியர்களுடைய அறிவுப்புலத்தை மேல் எடுத்துச்செல்லக் கூடிய பணிநிறைவு பெற்ற கல்வியாளர்கள் பலர் உள்ளனர். அவர்களைப் பயன்படுத்துவது பல்கலைக்கழகங்களின் கடப்பாடும் கல்வி வளர்ச்சிக்குரிய பணியுமாகும்.

'உலகப்பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்' என்னும் தலைப்பில் பேராசிரியர் உ.கருப்பத்தேவன் கட்டுரை இடம் பெறுகிறது. 'இந்தக் காலத்திற்குப் பொதுவுடைமைச் சமுதாயத்தை நிகர்த்த திருவள்ளுவரின் ஒப்புரவு நெறியே வேண்டற்பாலது' எனப் பேராசிரியர் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது சிந்தனைக்குரியதாகும். ஒப்புரவு என்பது நிகழ்காலம்; பொதுவுடைமை என்பது இறந்தகாலம்; என்றும்

நிலையான தத்துவம் ஒப்புரவு. ஒரு நாட்டில் மக்களை மனநிலையில் அடிமைகளாக நடத்தி வயிற்றிற்குச் சோறிடுவது பொதுஉடைமைத் தத்துவம்; அடிமைகளாக மக்களை நடத்துவது ஏற்புடைதன்று; அதனால் பொதுவுடைமை சிதைந்து உடைந்தது.

"நெடுநுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது"

எனத் தமிழ்ச்சமுதாயம் வாழ்ந்த நாட்கள் நல்ல நெஞ்சினோர் வாழ்ந்த காலம்; மக்கள் உள்ளம் சிதைந்தால் உலகம் சிதைந்துபோகும். உள்ளச்சிதைவு உலகம் சிதைவதற்கு மூலம்; திருவள்ளுவர் நூல் முழுவதும் உள்ளத்தின் நலம் குறித்துப் பேசினார். அகத்தின் தூய்மையே புறப்பொருள் வளர்ச்சி என்பது சான்றோர் நெறி.

சங்கச் சான்றோர்: கங்குல் வெள்ளத்தார்

தலைவனைப்பிரிந்த தலைவிக்கு இரவுப்பொழுது கருமையும் கங்குலுமாகி ஆற்றுவெள்ளம் போல் பெருகி நீந்திக் கரை சேரமுடியாமல் தவித்து மூழ்கடித்தது. எல்லா உயிரும் துயின்றது; தனக்கு அது இல்லை; தலைவனைப்பிரிந்த அன்பின் ஏக்கம்; உயிர்கள் அன்பிற்காக ஏங்குகின்றன. அதனை உணர்ந்து வாழ்வது வாழ்க்கை. தலைவி, 'எவன் கொல் வாழி' எனத்தன் அன்பினால் விளைந்த ஆற்றாமையைப் புலப்படுத்தும் கூற்று இது. முதுமுனைவர் இரா.இளங்குமரனார் சமயப் புலவர் அனைவருக்கும் ஆண்டு தோறும் விழா நடக்கிறது; சங்கப்புலவர்களின் பெயர் கூடக்கிடைக்க வில்லையே என்னும் ஆற்றாமையை நம்மால் உணரமுடிகிறது.

பிறகட்டுரைகள் சென்ற இதழின் தொடர்ச்சி.. .. ..

சங்கச் சான்றோர்க்குப் பெயர் சூட்டுவிழா

6. கங்குல் வெள்ளத்தார்

முதுமுனைவர். **இரா. இளங்குமரனார்**

கங்குல் - காரிருள் கப்பும் இரவுப்பொழுது. அவ்விரவுப் பொழுதில்; அவ்விரவன்றித் துணை இல்லாமையால் - தோழியும் -உறவும்-ஊரும்-உறங்கும் தனிமையில் தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துயர் பெரிதாம்.

"மாலை, ஒருதான் அன்றே கங்குலும் உடைத்தே" (122)
ஆரிருள் கங்குல் (153)
நள்ளென் கங்குல் (163)
"பல்லோர் துஞ்சும் பால்நாள் கங்குல்" (355)

என்று இக்குறுந்தொகைப் பாடல்களே கங்குல் பற்றிக் கூறுகின்றன.

வெண்ணிற நுரையொடு பொங்கிவரும் நீர் வெள்ளம். அவ்வெள்ளப் பெருக்குப் போல் இருள் பெருகிவரும் கருவெள்ளம் கங்குல். சொல்லே முரண்! பொருள் முரண் விட்டு வைக்குமா?

தலைவனைப் பிரிந்த தலைவி மிகத்துயருற்றாள். உயிரன்ன தோழி தேற்றினாள். **அவள் உயிர் அன்னவள் தானே! உயிரன் தலைவன் அல்லவோ!**

தேற்றும் தோழி ஆற்றியிருக்கக் கூறினாள். மாலைவந்தது; முல்லை மலர்ந்தது. அதன் அறிவிப்பு என்ன?

கார் காலம் வந்தது என்னும் கட்டியம் தானே.
கார் காலத்து வருவேன் என்றவர் வந்திலரே!

இதோ கதிர், தன் கதிர்களின் வெப்பத்தைத் தணித்தது! இருளோ வரத் தொடங்கி விட்டது. இவ்விருள் கப்பிக் கொள்ளும் நள்ளிரவு

வரும் முன்னரே வருத்தம் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நள்ளிருள் வெள்ளமெனப் பெருகிவரும் பொழுதில் துயரம் கடலைக் காட்டிலும் பெரிதாய் - விரிந்ததாய் ஆகும் அல்லவா! அப்பொழுது என்ன செய்வேன்? என்பது இது.

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினம் தணிந்த கையறு மாலையும்
இரவரம் பாக நீந்தின மாயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே. (குறுந். 387)

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது என்பது இதன் கூற்று வகை.

அரும்பொருள்: எல்லை கழிய - கதிரோன் மறைய; கையறுமாலை - செயலற்றுப் போகச் செய்யும் மாலை; நீந்துதல் - துயரம் நீங்கிக் கடத்தல்; கங்குல் - இரவு; நள்ளிரவு. வன்புறை - வற்புறுத்துதல்; எதிரழிந்து கூறுதல் - வருந்தி மறுத்துக் கூறுதல். பிரிந்தார்க்குப் பெருந்துயர்ப்பொழுது 'கூதிர்யாமம்' என்பது. ஏனெனில், தலைவன் தலைவியர் கூடியிருக்கும் பொழுது அஃ. தாதலின். கருநிறத்ததாலும் பரவிக் கிடத்தலாலும் நள்ளிருள் கடலினும் பெரிதாயிற்று. வெள்ளம் ஊரையே அடித்துச் செல்லும் போது யாரையும் விட்டு வைக்குமா?

'கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே'

என்னும் தொடர், இத்தொகை தொகுத்த **பூரிக்கோவுக்கு** பூரிப்பை ஏற்படுத்தியதால், அதனையே, பாடிய சான்றோர் பெயராகச் சூட்டினார்.

காப்பிய உவமைகள் : ஹோமர், மில்டன், சங்கச்சான்றோர்

பேராசிரியர் ப.மருதநாயகம்,
ஆய்வறிஞர்,
நடுவண் அரசு செவ்வியல் தமிழ் நிறுவனம்,
தரமணி, சென்னை — 600 113.

சென்ற இதழின் தொடர்ச்சி .. ..

உன்னுடைய போர்வீரர்கள் வெற்றிக்களிப்பினால் செய்யும் ஆரவாரம் எனக்குப் பெருமகிழ்ச்சி தருகின்றது. அது தரும் இன்பம் பலநாள் மழை பெய்யாதிருந்தபின் மேகங்கள் மேலே சென்று, குன்றின் சிகரங்களில் தவழ்ந்து, பருவ மழையாகிய தம் கடமையைச் செய்யும் போது பறவைகள் பல மகிழ்ந்து பாடும் ஒலி அளிக்கும் இன்பத்தை ஒத்தது.

பறவை ஒலியென்று வெறுமனே கூறாது எக்காலத்து, எச்சூழலில், எக்காரணம் பற்றி அவையெழுப்பும் ஒலியென்பதைப் புலவர் எவ்வாறு சொல்லிச் செல்கிறார் என்பது பாராட்டுக்குரியது.

பதிற்றுப்பத்து, எண்பத்தாறாம் பாடல், சேர மன்னன் ஒருவனின் ஈர நெஞ்சையும் வள்ளன்மையையும் போற்றுகிறது. அவன், வானியாற்று நீரினும் தண்ணளி மிக்கவன் என்று கூற விழையும் புலவர் வானியாற்றின் சிறப்பை, தம்மை மறந்து பாடுவார்.

நல்லிசை நிலைஇய நனம்தலை உலகத்து
இல்லோர் புன்கண் தீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
பாடுநர் புரவலன் ஆடுநடை அண்ணல்
கழைநிலை பெறாஅக் குட்டத்து ஆயினும்

புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்
சாந்துவரு வானி நீரினும்
தீந்தண் சாயலன் மன்ற தானே.

சந்தன மரத்தைப் புரட்டிச் செல்லும் வானி நீரினும் அவன் குளிர்ந்த உள்ளம் கொண்டவன்; இனிமையானவன். அந்த ஆறானது மூங்கில் மரத்தால் தரையைத் தொடமுடியாத ஆழம் உடையது; அதில் மூழ்கி விளையாடும் மங்கையரின் பொன்னாலான தோடுகள் கழன்று விழுந்து விடுமானால் அவற்றை மேலிருந்தே பார்க்கும் அளவிற்குத் தெளிந்த நீரைக்கொண்டது.

விறலியொருத்தி, எண்பத்தேழாம் பாடலில் சேரமன்னனின் ஆற்றல், கரும்புத் தண்டுகளாலான படகின் ஆற்றலினும் மிக்கது என்று பாராட்டி, படகு கடக்கும் ஆற்றை ஓவியப்படுத்துகிறாள்.

சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை
சந்தம் பூழிலொடு பொங்குநுரை சுமந்து
தெண்கடல் முன்னிய வெண்தலைச் செம்புனல்
ஒய்யும் நீர்வழிக் கரும்பினும்
பல்வேல் பொறையன் வல்லனால் அளியே.

வறுமைவாய்ப்பட்டார்க்கு உதவுதலில் வேறபடை மிக்க சேரமன்னன் கரும்புக் கட்டைகளாலான படகினும் வலியன். வெண்மையான நுரையையும் செம்புனலையும் கொண்ட ஆறானது சந்தன, அகில் மரங்களைச் சுமந்து கொண்டு வெள்ளம் கரை புரண்டோட, கடலை நோக்கிச் செல்கிறது. அவ்வாற்றைக் கடக்கக் கரும்புப்படகு எளியோர்க்குத் துணை செய்வது போல் அம்மன்னன் பாடிச்செல்வார்க்கு அரிய அணிகலன்களைத் தருவது உறுதி.

⑨

சங்கச் சான்றோர் பாடல்களில் காணப்படும் இத்தகைய உவமைகள் யாவும் மேலையோர் விதந்து கூறும் ஹோமர், மில்டன் போன்றோரின் உலகறிந்த காப்பியங்களில் காணப்படும் உவமைகளினும் பொருத்தம், எடுத்துக்காட்டல், அணியாதல், தாழ்த்தல், உயர்த்தல், வருவது சுட்டல், சொற்சிக்கனம் ஆகிய எல்லாக் கூறுகளிலும் உயர்ந்தவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவற்றை ஆழ்ந்து கற்பார் இதனை எளிதில் உணரலாம்.

மேற்கோள் நூல்கள்

The Poems of John Milton, edd. John Carey and Alastair Fowler, London: Longmans, 1968.

Classics in Translation, Volume I : Greek Literature, edd.Paul Mackendrick and Herbert M.House, Wisconsin : The University of Wisconsin Press, 1952.

Poems of Love and War, selected and translated by A.K Ramanujan, OUP, 1985. Geroge L. Hart **The Poems of Ancient Tamil** Berkley : University of California Press, 1975.

Anandavardhana's Dhvanyaloka, tr. K. Krishnamurthy,

Dharwar : Karnatak University, 1974.

செம்மொழித் தமிழ் : இலக்கண, இலக்கியங்கள்,

பதிப்பாசிரியர் : ம.வே.பசுபதி, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம், 2010.

இலக்கணவியல்: மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்

(ஒரு வாசிப்பு)

பேராசிரியர்.செ.வை.சண்முகம்
மொழியியற்புலம் (ப.நி.)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம். கைபேசி : 98651 96476

1. முன்னுரை

இலக்கணவியல்(மீக்கோட்பாடு, கோட்பாடுகளும்) என்பது, இராசாராமின்(2010) நூலின் தலைப்பு. 'கோட்பாடு' என்ற சொல் அதிகப் பரிச்சயமானது, உலகளாவியது. 'இலக்கணவியல்', அண்மைக்காலத் தொடர். 'மீக்கோட்பாடு'(meta theory), தமிழுக்குப் புதிய தொடர். மேலும் மீக்கூறு, மீநிலை, மீச்சிந்தனை (ப.7,301) மீஅறிவு,மீமொழி (ப.404) என்ற தொடர்களும் நூலில் காணப்படுவதால் அது ஒரு புதிய சொல்லாக்கம்; பொது நிலையில் கோட்பாடுகளின் கோட்பாடு என்று பொருள்படும்.

இலக்கண நூல்கள் ஆராயப்படுவதால் இலக்கணவியல் என்று பொதுமைப்படுத்தி, அதன் இலக்கண உருவாக்க ஆய்வுபற்றிய கோட்பாடுகளும் அவைகளுக்கு உரிய மீக்கோட்பாடுகளும் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

இலக்கணம் என்றாலே ஒரு மொழியின் இலக்கணம் என்று உணர்ந்துகொள்ளப்படும். இது காலத்தால் முந்தியது. மாறாக மொழியியல் உலகில் உள்ள எல்லா மொழிகளின் அமைப்பைப் பொதுமைப்படுத்திக் கோட்பாடாக விளக்குவது என்று பொருள்படும். இது காலத்தால் மிகவும் பிந்தியது. இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் சாதனை. மொழியியலை ஒட்டி இலக்கணத்தின் பல்வகை ஆராய்ச்சிக்கு இலக்கணவியல் என்று பெயர் இடப்பட்டுள்ளது.

கிரேக்க ரோமன் இலக்கணங்கள், வட மொழி இலக்கணங்கள், தமிழ் இலக்கணங்கள் ஆகியவை காலத்தால் பழமையானவை. எனவே, அவைகளை மரபிலக்கணங்கள் என்று குறிப்பிட்டு, தமிழ் இலக்கணங்களை ஆராய்வதற்கான மீக்கோட்பாடுகள் நூலில் உருவாக்கப்பட்டு, தமிழ்இலக்கணங்கள் தனியே ஆராயப்பட்டுள்ளன.

மீக்கோள் உருவாக்கம் என்பதால் கிரேக்கம், ரோமன், வட மொழி மரபிலக்கண கருத்துகள் ஆங்காங்கே எடுத்துக்காட்டி, ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன.

இலக்கணம் பல காலமாகப் படிக்கப்பட்டும், ஆராயப்பட்டும் வந்தாலும் அதன் ஆய்வுப் பரிமாணங்கள் குறைவு. உண்மையில் இலக்கணம் ஒரு நூல்முறையில் சூத்திரங்களின் விளக்கம், உரையாசிரியர் விளக்கம், பாடபேத ஆய்வு, பதிப்பு, இலக்கணக் கூறுகளின் மொழியியல் கோட்பாடு என்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் காலந் தோறும் எழுதிய பல இலக்கணங்கள் இருப்பதால் இலக்கண வரலாறும் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இலக்கணவியல் என்பது உலகளாவிய கோட்பாடு-மீக்கோட்பாடு என்று புதிய கருத்தாக்கம் உருவாக்கி ஆராய முயலுவது.

இலக்கணம் என்பதற்கே சில புதிய விளக்கம் கொடுத்து, அதை ஒட்டி இலக்கணவியல், இலக்கண உருவாக்கம், மீக்கோட்பாடு என்பதன் அடிப்படையில் பல கருத்தமைவுகள் நூலில் முன் வைக்கப்பட்டுள்ளன. அந்த முறையில் தமிழ் இலக்கண ஆய்வில் இது ஒரு புதிய உயர் தளமே.

அந்த முறையில் இலக்கண அறிஞர்களின் கவனத்தை இந்த நூல் கவர்ந்திருந்தாலும், இலக்கணவியலின் பல்வேறு பரிமாணங்களும், மீக்கோட்பாடும் தீவிரமாக விவாதித்துப் பரவலாக்கப்படவில்லை. ஆனால் அவருடைய மாணவர்கள் (அறவேந்தன், சங்கரேஸ்வரி, சாவித்திரி) முதலியோர் அந்த ஆய்வை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்கு உரியது. 'மீக்கோட்பாடு' (சத்தியராஜ், 2018) என்ற நூலும் குறிப்பிடத்தகுந்தது. அந்த நிலையில் அதற்கான ஒரு கருத்தரங்கு நடத்துவதும் பாராட்டுவதற்கு உரியது.

2.இலக்கணம் சொல்லாய்வு

தமிழைப் பொறுத்த வரையில் இலக்கணம் என்பது கலைச்சொல்லாய் இன்று பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் தொல்காப்பியத்தில் மூன்று இடங்களில் (புறத்திணை 1:2, செய்யுள்,240:4, 241:2) 'வரையறை, பயன்பாட்டு விதிகள்'(definition,

rules of usage') என்றும், ஒரு இடத்தில் (சொல். கிளவியாக்கம் 27.4) 'மரபு வழக்கு' (regular usage') என்றும் பொருள் உடையது (தொல்காப்பியச் சொற்பொருளடைவு, பாலசுப்பிரமணியன், 2016:58).அதாவது சிறப்பியல்பு என்ற பொருளை உடையது என்பது மீனாட்சிசுந்தரனார் கருத்து (இராசாராம், ப.42). இன்று நாம் ஆங்கிலத்தில் பயன்படுத்தும் க்ராமர்(grammar) என்ற பொருளில் தொல்காப்பியம் அந்தச் சொல்லைப் பயன்படுத்தவில்லை.

மணிமேகலையில் தொடராக 'இலக்கண(இலக்கு அண) தொடர்' 30.18,24) என்றும்; பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கலைச்சொல்லாகவே 'இலக்கணம் யாதும் அறியேன்' (நாலடி. 40), 'இலக்கணத்தால் எட்டும் பயன்' (ஆசாரக் கோவை 2:3) என்றும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

குறி,புலன்,நூல் ஆகியவை நேரடியாகவும் எழுத்து, இயல்பு முறை, மரபு ஆகியவையும் இலக்கணம் என்ற பொருளில் தொல்காப்பியத்தில் கையாளப்பட்டுள்ளதை நூலில் (ப.26தொ.) எடுத்துக்காட்டி இலக்கணம் என்பதை ஒரு கலைச்சொல்லாகக் கொள்ளவேண்டும் என்று விளக்கி அது ஒரு நூலாக/ புத்தகமாக உலக அளவில் பயன்படுவதையும் நூல் குறிப்பிட்டுள்ளது. இன்று தமிழில் பரவலாக மொழியின் இலக்கணத்தையும் இலக்கியத்தின் இலக்கணத்தையும் குறிப்பதாகவே இலக்கணம் என்ற சொல் வழங்கி வருகிறது.

3.மரபு இலக்கணம்

இலக்கணச் சிந்தனை பிற அறிவு சார்புலச் சிந்தனையைக் காட்டிலும் மிகத் தொன்மையானது. கிரேக்க இலக்கணத்தின் மரபிலக்கணச் சிந்தனை முன் பொது ஆண்டு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. வட மொழியில் முன்பொது ஆண்டு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து (அதாவது பாணினி காலம்) ஒரு பண்பட்ட இலக்கண மரபு இருந்தது. இந்திய மரபில் வடமொழிக்கு இணையான மரபு உடையது தமிழ் இலக்கண மரபு.

ஒரு மொழியில் இருபதாம் நூற்றாண்டுக்கு முன் தோன்றிய இலக்கணங்களை மரபு இலக்கணம் என்று நூலில் குறிப்பிட்டு(ப.32) அவை பற்றி சில கூடுதல் விளக்கங்களை நூல் அளித்துள்ளது.

அ) மனித இனப்பண்பாட்டின் ஒரு கூறு. அந்த சமூகச் சிந்தனைக்கு உட்பட்டது(ப.36).

ஆ) மரபிலக்கணங்கள் ஒரு மொழியின் இலக்கண அமைப்புகளில் காணும் ஒழுங்கமைவை (regularity) விளக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டது (ப.38)

இ) முதனூல்-வழிநூல் என்ற மரபு உடையது. அதனால் (முதனூல் - வழிநூல்) முக்கியம் கொடுத்ததால் பிரதிக்கு (text) அதாவது இலக்கியத் தரவுக்குக் கொடுத்த முக்கியத்துவம் இரண்டாம் பட்சமாயிற்று.

ஈ) மொழியின் எல்லா இலக்கண அமைப்புகளையும் முழுவதுமாக விளக்கியதில்லை. உதாரணம் தொல்காப்பியம் கால விகுதிகளையும் வினைச் சொல்லின் மாற்று வடிவங்களையும் விளக்கவில்லை(ப.39) என்பது ஒரு குறை

உ) மொழியின் ஒழுங்கமைவை விளக்கிய அளவுக்குப் பிறழ்வு (அதாவது உறழ்ச்சி) விளக்கப்படவில்லை.

ஊ) பொதுவாக இலக்கணக் கல்வி மொழிசார் ஆய்வாக எல்லா மொழியிலும் பயிலப்பட்டு வருகிறது. அதனால் இலக்கணமாகப் பொதுவாகப் பல கருத்துகள் வழங்கிவருகின்றன. அவைகளில் பேச்சு மொழிக்கு இலக்கணம் இல்லை; இலக்கணம் பிழையறப் பேசவும் எழுதவும் பயன்படும் நூல்; இலக்கணம் மொழி மாற்றங்களுக்கு அப்பாற்பட்டது போன்ற கருத்துகள் பரவலானவை.

எ) ஒரு மொழியில் வெவ்வேறு கால கட்டத்தில் இலக்கணங்கள் எழுதப்பட்டுள்ளன. எனவே, இலக்கண நூல் வரலாறு ஓரளவு விரிவாக எழுதப்பட்டுள்ளது. அவைகளை வரலாற்று நோக்கில் முதல்நூல், வழிநூல் என்ற கோட்பாடு நோக்கில் தமிழ் இலக்கணங்கள் ஓரளவு விளக்கப்பட்டுள்ளன.

ஏ) மரபிலக்கணம் செய்யுள் மொழியைப் பதிவு செய்யும் ஓர் ஆவணம்(ப.309)

ஐ) பொதுவாக, இலக்கணம் என்பது தாய்மொழி கற்க உதவும் நூலாகவே பரவலாகக் கருதப்படுகிறது. தமிழில் இடைக்காலத்தில் நடந்த சமூக மாற்றங்களால் தமிழகத்தில் வடமொழியும் கற்றுக்கொள்ள இலக்கணம் உதவுவதாகக் கொள்ளப்பட்டது. அதனால் வடமொழி இலக்கணக் கருத்துகளும் தமிழ் இலக்கணங்களில் இடம் பெற்றன. அதனால் 11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வீர சோழியம் பாயிரம் 'உரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே'(3.4) என்று குறிப்பிட்டுள்ளது.

4.மொழியியல்

இருபதாம் நூற்றாண்டில் உலகளாவிய நிலையில் மொழியியல் என்ற ஆய்வு தொடங்கிப் பரவலானது. மொழியியலில் கிளைமொழிகள், சமூகமொழியியல், பழங்குடிமக்கள் மொழிகள், வரலாற்று மொழியியல், அண்மையில், இலக்கிய மொழியியல், கணினி மொழி என்று மொழி ஆய்வின் தளம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அந்த முறையில் ஒரு மொழியிலுள்ள பழைய இலக்கணங்களின் மொழியியல் கோட்பாடு காணும் முயற்சியும் மொழியியலாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் இலக்கண உருவாக்கம், இலக்கணவியல் என்ற கருத்தமைவுகளும் முன்னரே உருவாக்கப்பட்டுள்ளன. அவைகளை, உலகளாவிய பொது நிலையில் ஆராய்வதற்கு உரிய மீக்கோட்பாடு உருவாக்க முயற்சியும், அவைகளைத் தமிழ் இலக்கணங்களுக்குப் பொருத்திப் பார்க்கும் முயற்சியும் இந்த நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.இலக்கணவியல்

மொழியியல் என்ற சொல்லை ஒட்டி ஒரு மொழியில் உள்ள மரபிலக்கணங்களை மொழியியல் கோட்பாடுகளை ஒட்டிச் செய்யும் ஆய்வு என்ற முறையில் இலக்கணவியல் என்ற புதுசொல் அண்மைக் காலமாகக் கையாளப்படுகிறது. அதனால் இலக்கணம் என்பதற்குக் கூடுதல் விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

1) இலக்கணத்தைப் பற்றிய அடிப்படைச் சிந்தனைகள் உலக மொழிகளுக்கு எல்லாம் பொதுவானவை. மனித மனம்

இலக்கணத்தைப்பற்றி உள்வாங்கியிருக்கும் பொதுமைகள் மொழிப்பொதுமைகள் எனப்படுகின்றன.

2) இலக்கணம் ஒரு பிரதியை (text) அடிப்படையாகக் கொண்டது என்று கருதுவது. உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளின் மரபு இலக்கணங்கள் இலக்கியங்களைப் பிரதியாகக் கொண்டுள்ளன. சமஸ்கிருதம் வேதங்களை, அதாவது சமய நூல்களைக் பிரதியாகக் கொண்டது. தொல்காப்பியம் இலக்கியத்தைப் பிரதியாகக் கொண்டாலும் அதன் பிரதி, வழக்கும் (பேச்சு வழக்கு), செய்யுளும் தரவாகக் கொண்டது. 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்' என்று பாயிரம் குறிப்பிட்டதற்கு ஏற்பத் தொல்காப்பியமே 'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும் மெய்பெறக் கிளவி' (எச்சம் 67.1/2) என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் 'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே' என்று கூறுவதால் (மரபியல்92.1),'வழக்கு' என்பது உயர்ந்தோர் பேச்சு வழக்கை அதாவது ஒரு குறிப்பிட்ட அறிவுசார் குழுவையே குறிக்கும்.

3) இலக்கணம் 'சமூக உற்பத்திப் பொருள்' (18) என்று கருதுவது இலக்கண உருவாக்கத்துக்கு ஒரு அடிப்படையான கருத்து. அதாவது 'இலக்கணம் மனித இனப்பண்பாட்டின் ஒரு கூறு. எனவே சமூகத்தில் நிகழும் மெய்நிகழ்வுகளைத் தரவாகக் கொள்வதால், சமூகச் சிந்தனைக்கு அப்பால் உருவாக முடியாது. சமூக செயற்பாடுகளும், பண்புகளும் இலக்கணத்தின் அங்கங்களாக மறைமுகமாகவேனும் இடம் பெற்றுவிடுகின்றன'(ப.36) என்று கருதப்படுகிறது. அதனால்தான் இலக்கண உருவாக்கம் என்ற கருத்தமைவு தோன்றியது.

4) இலக்கணம் என்பது ஒரு நூல் என்னும் கருத்தியலைவிட இலக்கணம் என்பது ஒரு சிந்தனைப்பள்ளி என்பது இலக்கணத்தை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்ய உதவுவதாகக் கருதப்படுகிறது(ப.54). இந்த நிலையில் இலக்கணவியலைத் தனிப் படிப்பாகக் கருதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறை என்று கூறலாம்(ப.72).

'மரபிலக்கணப் படிப்பான இலக்கணவியலை ஒரு அறிவு சார் புலமாகக் கருதும்போது கோட்பாட்டு உருவாக்கமும் ஆய்வு முறைகளும் முதன்மை இடம் பெற வேண்டும்.... அதற்கு ஒரு மூல வரைச்சட்டம் தேவைப்படுகிறது'(ப.279) என்று கருதியே மீக்கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

6.இலக்கண உருவாக்கம்

மொழியும் இலக்கணமும் சமூகம் சார்ந்தது என்பதால் 'இலக்கண உருவாக்கம்' என்ற புதிய கருத்தமைவு தோன்றியது. இலக்கண உருவாக்கம் ஒரு திட்டமிட்ட மொழிச் செயல்பாடாக அமைகிறது(ப.83).

இலக்கண வரலாற்றில் ஒவ்வொரு இலக்கண உருவாக்கத்தின் பின்னரும் அதன் தேவை உணரப்பட்டதும், மொழித் திட்டமிடுதலின் ஒரு அங்கமாக அத் தேவை நிறைவேற்றப்பட்டதும், முக்கியமான நிகழ்வுகளாகப் பதிவாகியுள்ளதை அறியமுடிகிறது. மொழி பற்றிய பிரச்சினை அதாவது எந்த வழக்கை ஏற்றுக்கொள்வது / எதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற இலக்கண விளக்கம் 'மொழிப் பொது நிலையாக்கத்தை நோக்கி நகரும்போது இலக்கண உருவாக்கம் சமகாலச் சமூகப் பிரக்ஞைக்கு உள்ளாகிவிடுகிறது'(ப.131).

'இலக்கண உருவாக்கத்தில் இலக்கணக் கலைஞனின் சமூக உணர்வும் மொழி உணர்வும் முக்கியப் பங்கு வகிக்கின்றன'(ப.189) எனவே, அதாவது 'இலக்கண உருவாக்கம் சூனியத்தில் நிகழ்வது அன்று' (ப.232) என்பது அறியத்தகுந்தது.

'மொழி பொதுநிலையாக்கத்தை (standardization) நோக்கி நகரும்போது, இலக்கண உருவாக்கம், சம காலச் சமூகப் பிரக்ஞைக்கு உள்ளாகிவிடுகிறது'(ப.131). 'செய்யுள் வழக்கைக் காட்டிலும் மரபிலக்கணக் கலைஞனுக்கு உயர்ந்தோர் வழக்கே இலக்கண உருவாக்கத்தில் பெரும் சவாலாக அமைகிறது'(ப.132). 'மரபு தழுவிய செய்யுள் மொழியே இலக்கண உருவாக்கத்தில் கூடுதல் தரவாக அமைகிறது'(ப.310).

உருவாக்கம் என்னும்போது அகநிலை வளர்ச்சியே அதிகமாகச் சிந்திக்கப்படுகிறது. புற நிலை வளர்ச்சியாகச் சமயம் மட்டுமே ஆசிரியர் சமயம் மட்டுமே பேசப்படுகிறது. ஆனால் சமூகப் பொருளாதார, அரசியல், மற்றும் கல்விநிலைக் காரணிகளும் கவனத்துக்கு உரியவை(ப.202). நூல் அரங்கேற்றம் என்ற முறையில் அரசர்களும் பங்கு கொண்டார்கள்.

இலக்கணங்களின் நோக்கங்களே வெவ்வேறாக இருக்கலாம். அனைத்து நோக்கங்களையும் முறைப்படுத்தி ஆராய ஒரு மீக்கோட்பாடு (ப.282) தேவை. நோக்கங்களுக்கு ஏற்பக் கோட்பாடு மாற்றம் அமையும். அதுபோல உள்ளடக்க மாறுபாடு, பிரதி,விதியாக்கம்,நூலாக்கம் ஆகிய இலக்கண உருவாக்கப் படிநிலை மாறுபாடுகளும் (ப.298) வெவ்வேறு இலக்கணக் கோட்பாடுகள் அமையக் காரணம் ஆகும். எனவே 'இலக்கண உருவாக்கம் உள்ளியல்பாகக் கொள்ளும் பல வேறு மீச்சிந்தனைகள் இனம் காணப்பட வேண்டும்' (ப.301) என்று கருதியே மீக் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

7.இலக்கண உருவாக்க மீக் கோட்பாடு சிந்தனைகள்

இலக்கண உருவாக்க மீக்கோட்பாட்டுச் சிந்தனைகளாக நாலாவது இயலில் 10 கருத்தமைவுகள் அடங்கியுள்ளதாகப் பட்டியலிட்டு (ப. 303) அவை ஒவ்வொன்றாகத் தொடர்ந்து விளக்கப்பட்டுள்ளன.

அவைகளைப் பொதுமைப்படுத்தி மறுவரிசை செய்து இங்கு விளக்கப்பட்டுள்ளன. தரவு,மொழிஅமைப்பு, வருணனை அணுகுமுறை, நோக்கம், மதிப்பீடு என்று பொதுமைப்படுத்தலாம். மேலும் 1) இலக்கணங்களின் தலைப்புப் பொருள் வகைப்பாடு 2) எழுத்து, சொல் என்ற மொழி அமைப்பின் உள்ளமைப்புப் பாகுபாடு 3) இலக்கண கோட்பாடு ஆகிய கூறுகளும் நூலுக்குள் வேறுவேறு இடங்களில் விவாதிக்கப்பட்டுள்ளது, மீக்கோட்பாடின் கூறுகளாகச் சேர்க்கப்பட வேண்டும் (விவரம் இறுதியில்)

தரவு(பிரதி)

1. மொழி வழக்கும் செய்யுளும் (5)
2. வரலாற்று நிலையும் சமகால நிலையும் (1)

மொழி அமைப்பு பொதுக் கருத்து

3. மொழி அமைப்பு ஒழுங்கு (6)
4. பகுத்தறிவு வாதமும் அனுபவ வாதமும் (4)
5. ஒப்புமையாக்கத்தின் மொழி கற்றல் (3)

வருணனை அணுகுமுறை

6. விதிமுறை விளக்கமுறை (7)
7. கற்றல்/கற்பித்தல் முறை (8)

நோக்கம்

அ) மொழி சார் நோக்கம்

8. மொழித் திருத்தமும் மொழித் தூய்மையும் (9)

ஆ) சமூக உணர்வு சார் நோக்கம்

9. வைதீகம்/அவைதீகம் (2)

மதிப்பீடு

10. முழுமையான விளக்கம் இன்மை (10)

கூடுதலாக மரபிலக்கணங்களில் கருத்து வகைமை (எழுத்து, சொல், பொருள் போல), மொழி அமைப்பை விளக்கும் இலக்கணங்களின் முறை (எழுத்ததிகார வகைப்பாடு, சொல்லதிகார வகைப்பாடு), மொழியியல் கோட்பாடு, நூலாக்க முறை (அகநிலைக் கூறு - நுதலிய பொருள் மட்டும் நாலு கருத்தமைவுகள் மீக் கோட்பாட்டில் அடக்கலாம் என்பது பின்பகுதியில் விளக்கப்படும்.

இந்த வகைப்பாட்டின் மறு வருணனை

தரவு என்ற கருத்தாக்கம் நூலிலேயே உள்ளது.

'இலக்கணத்தைப் பொறுத்தவரையில், பிரதிமரபு எது? என்ற கேள்வியை எழுப்பி 'பிரதி எந்தத் திறனாய்வும் மேற்கொள்ளப்படாத பொருள். இதனைப் பகுப்பாய்வுக்கு உட்படாத *தரவு* என்று கூறலாம்' என்று பொதுநிலையில் விளக்கி 'தமிழ் இலக்கணப் பகுப்பாய்வுக்கான பிரதி, வழக்கும் செய்யுளும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ப.112). 'இலக்கணவியல் பகுப்பாய்வின் *தரவு* உரை மற்றும் செய்யுள் உள்ளிட்ட இவ்வழக்கு மட்டுமே'(ப.362) என்றும் கூறுவதால் தரவு என்ற பொதுக் கருத்தைமையில் நூலில் அமைந்துள்ள செய்யுளும் வழக்கும், வரலாற்று நிலை-சமகால நிலை என்ற தலைப்புகள் அடங்கும். உரை என்பதையும் ஒரு உட்கூறாகக் கொள்ளலாம்.

மொழி அமைப்புப் பொதுக் கருத்து என்ற பெருந்தலைப்பில், 1) மொழி அமைப்பு ஒழுங்கு, 2)பகுத்தறிவு வாதமும் அனுபவ வாதமும், 3)ஒப்புமையாக்கத்தின் மொழி கற்றல் ஆகிய மூன்றையும் அடக்கலாம்.

வருணனை அணுகுமுறை என்ற தலைப்பில் 1) விதிமுறை விளக்கமுறை, 2) கற்றல்/கற்பித்தல் முறை ஆகிய இரண்டையும் அடக்கலாம்.

நோக்கம் என்ற பெருந் தலைப்பில்

அ) மொழி சார் நோக்கம் மொழித் திருத்தமும் மொழித் தூய்மையும்
ஆ)சமூக உணர்வு சார் நோக்கம்

வைதீகம்/அவைதீகம் ஆகியவைகளை அடக்கலாம்.

மதிப்பீடு என்பதை முழுமையான விளக்கம் இன்மை என்ற தலைப்பில் அடக்கலாம்.

..... தொடரும்

உலகப் பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

முனைவர் உ.கருப்பத்தேவன்
உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ)
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை -21. கைபேசி : 94435 71776

முன்னுரை

'உலகப் பண்பாட்டில் திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்' என்னும் பொருளில் அமைந்துள்ள இந்த ஆய்வுக்கட்டுரையில் திருக்குறளில் ஒப்புரவு நெறி, அறந்தழீஇய அரசியல், நெறிசார்ந்த அறிவியல், உலக சமாதானம், மக்கள் தொகைப் பெருக்கம், போர்வெறியும் நாட்டு வெறியும், கூட்டுறவு, உடன்பாட்டுச் சிந்தனைகள், மரணம் வாழ்க்கையில் விபத்தா?, நாகரிகம், வறுமை ஒழிப்பு, சுரண்டிப் பொருள் சேர்த்தல் என்னும் பகுப்புக்களில் உலகப் பண்பாட்டிற்குத் திருக்குறள் அளித்துள்ள விழுமிய நெறிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றுள்ளன.

திருக்குறள் 'ஒப்புரவு நெறி'

திருக்குறள் நெறி, நுகர்பொருள் உற்பத்தியைக் குறிக்கும் நெறியாகும். பசியும் பட்டினியும் இல்லாத நாட்டைக் காண்பதே திருவள்ளுவர் நெறியின் நோக்கமாகும். கடவுள் இருக்கிறார்; பக்தி இருக்கிறது; மனிதன் இருக்கின்றான்; மனிதப் பிறப்பு உயர்ந்தது; மிக உயர்ந்தது. மனிதனுக்கு வாய்த்த பொறிபுலன்கள் அளவற்ற ஆற்றலுடையன; அவற்றால் படைப்பாற்றல் வளர்கின்றது. இவ்வளவு இருப்பினும் மனிதனை மனிதனாக்கும் அன்பு இல்லையேல் வெறும் எலும்பும் தோலும் போர்த்த உடம்புதான்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

மானுட வாழ்வு தியாகத்திற்கே உரியது. மலர் மலர்ந்து மணம் பரப்பி உதிர்வதைப் போலத்தான் மானுட வாழ்க்கையும் அமைய வேண்டும். திருவள்ளுவர் நெறி ஒப்புரவு நெறி; உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நெறி;

ஒத்தது அறிந்து செய்யும் வாழ்க்கை நெறி. ஆதலால், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நெறியே, ஒப்புரவு நெறி. உலகத்தோடு ஒட்ட ஒழுகும்நெறி ஒப்புரவு நெறியே திருக்குறள் காட்டும் உலக வாழ்வியல் நெறியாகும். இது அன்பினை அடிப்படையாகக் கொண்டது. திருவள்ளுவர் உலகத்துக்கு அளித்துள்ள வாழ்க்கை நெறியினைப் பலவகைகளாகப் பகுக்கலாம். அவற்றுள் இன்றியமையாதது ஒப்புரவு நெறியாகும். ஊருணி, பயன்மரம், மருந்துமரம் ஆகியன கைம்மாறு கருதாமல் மனிதகுலத்திற்குப் பயன்படுகின்றன. அவற்றுள்ளும் மருந்து மரம் தனக்கு வரும் தீங்கினையும் ஏற்றுக்கொண்டு வாழ்வளிப்பது.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் (217)

என்பது திருக்குறள். இதனை வலியுறுத்தியே திருவள்ளுவர்,

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அ∴தொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து (220)

என்றார். நிர்வாணமான சுயநலமும் பணவேட்கையும் கொண்ட இந்தக் காலத்திற்குப் பொதுவுடைமைச் சமுதாயத்தை நிகர்த்த திருவள்ளுவரின் ஒப்புரவு நெறியே வேண்டிற்பாலானது.

'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களுக்குப் பெரும்பாலும் உரையாசிரியர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்தல், உதவி செய்தல் என்றே உரைகண்டுள்ளனர். இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் 'ஈகை' என்ற தனிஅதிகாரத்திலும் கூறுகின்றார். 'ஈகை', 'ஒப்பரவறிதல்' இவ்விரண்டு அதிகாரங்களும் ஒன்று போலத் தோன்றினாலும் ஆழமான கருத்து வேறுபாடு உடையன. ஈகை வழிப்பட்ட சமுதாயத்தில் உடையார் - இல்லார் என்று வேற்றுமை காணப்படும். அவ்வழியில் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தலைதூக்கி நிற்கும். ஒப்புரவறிதல் அதிகாரத்தில் உடையார், இல்லார் வேற்றுமை இல்லை. உயர்வு, தாழ்வின்றிக் கொடுத்தல் கடமை எனவும், கொள்ளல் உரிமை எனவும், எனக்கொள்ளும் நிலையில் திருவள்ளுவரின் சிந்தனைகள் குறட்பாக்களில் வலியுறுத்தப் பெற்றுள்ளன.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (214)

என்பது குறள். இங்கு ஒத்தது என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் வழக்கம் போல 'உலக நடையினை' என்றெழுதித் தப்பித்துக் கொண்டுவிட்டார். 'தன்னைப் போல் பிறரை நினை' என்ற விழுமிய நெறியே, அருள்வாக்கே 'ஒத்தது' என்பதற்கு ஏற்புடைய பொருளாகும். ஆதலால், திருவள்ளுவர் கண்ட ஒப்புரவு நெறியை இக்காலப் பொதுவுடைமைச் சமுதாயத்திற்கு நிகரான நெறியாகக் கொள்ளலாம்.

இன்றைய சமுதாயத்தில் பலர், தம்மொடு பிறர் ஒத்துவர வேண்டும் என்று விரும்புகின்றார். தவிர, பிறரோடு தாம் ஒத்துப்போக வேண்டும் என்று நினைப்பதில்லை. பலருக்கு எது ஒத்ததோ அதற்குச் சிலர் இணங்கியே வாழவேண்டும். அதுவே சமுதாய நியதி, ஒழுக்கம். அங்ஙனம் உணர்ந்து வாழ்பவர்களே வாழ்பவர்கள். அவர்கள் வாழ்க்கையிலேயே இன்பமும் அமைதியும் இருக்கும். மற்றோர்க்கும் அவர்தம் வாழ்க்கையால் பயனுண்டு. இங்ஙனம் ஒத்தறிந்து ஒழுகத் தெரியாதவர்கள் வாழ்ந்தாலும் நடமாடினாலும் பிணம் என்றே கருதவேண்டும் எனத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். இதுவே திருக்குறள் காட்டும் உலக ஒப்புரவு நெறியாகும்.

அறந்தழீஇய அரசியல்

திருக்குறளுக்கு முன்னர் உலக அரங்கிலும் இந்திய நாட்டளவிலும் பல அரசியல், சமூக, பொருளாதார நூல்கள் தோன்றியிருந்தாலும் திருக்குறளைப் போன்று அறம் தழீஇய அரசியலை அந்நூல்கள் கூறவில்லை. சாணக்கியரின் அர்த்தசாஸ்திரமும் பிளேட்டோவின் குடியரசும் மன்னனின் அதிகாரத்திற்கு அரண் சேர்ப்பன. ஆனால் திருக்குறளின் அறந்தழீஇய அரசியல் மனித உரிமைகளையும் மக்கட் சமுதாய நலன்களையும் மதித்துப் போற்றிப் பாதுகாப்பது ஆகும். உலக அளவில் அறங்கூறும் அரசியல் நூல்களில் திருக்குறளுக்கு நிகரான நூல்களே இல்லையெனலாம்.

திருக்குறளின் வைப்புமுறை வியக்க வைப்பன; சிந்திக்கத் தூண்டுவன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முறை வைப்பு சிறந்தது; இயற்கையானது என்பதே நமது கருத்து.

திருவள்ளுவர் நூல் செய்யத் தொடங்கும் முன்னரே முப்பாலாகச் செய்யத் திட்டமிட்டிருப்பார் எனக் கொள்ள இயலாது. இது மேலாய்வுக்கு உரியது. அவர் 'அறம் குறித்தே நூல் இயற்றச் சிந்தித்திருப்பார். ஆயினும் அறத்துப்பாலின் முடிவில் 'ஊழ்' என்ற அதிகாரம் வந்தமைகின்றது. இ.்து, இயல்பும் கூட. செய்யும் அறத்தைப் பொறுத்து ஊழ் அமைவதில்லை. அறம் செய்யும் நோக்கத்தைப் பொறுத்தே ஊழ் அமைகின்றது. அறிவும் சமுதாய உணர்வும் கலந்த நிலையில் செய்யப்பெறும் எந்தவொரு செயலும் ஊழாக வடிவம் பெறாது. ஆக, வாழ்தல் செயல் இயக்கமே. அந்த அறம் அறியாமை காரணமாகவும் சமுதாய அமைப்பின் காரணமாகவும் பொருளியல் குறைபாடுகள் காரணமாகவும், அமைவன. அரசு அறியாமையின் காரணமாகவும் ஊழாக உருப்பெறுகின்றது.

தெப்பம் வெள்ளப் பெருக்கின் வழிப்பட்டுச் செல்லல்போல, மனிதன் ஊழின் வழிச் செல்லலாகாது. ஊழை எதிர்த்துப் போராடும் கருவி, காரணங்களை அறிமுகப்படுத்தவே திருவள்ளுவர் பொருட்பாலை அமைக்கின்றார். ஆயினும் திருவள்ளுவர் காலத்துச் சமுதாயமும் மக்களும் திருவள்ளுவரின் வழித்தடத்தைப் பின்பற்றி வாராமையின் காரணமாக அவர் மனநிறைவு பெறாத நிலையில் பொருட்பாலினைக் 'கயமை' என்னும் அதிகாரத்தில் முடிக்கின்றார். திருக்குறட் பொருட்பாலின் கடைசி அதிகாரம் 'கயமை' ஆகும். அரசு, நட்பு, பெரியோர், சால்புடையோர் ஆகிய இவ்வளவு பேர் முயன்றும் திருத்த முடியாத கயவர்கள் என்றும் சமுதாயத்தில் இருப்பர் என்றே திருவள்ளுவர் நம்பினார்.

ஊழ்த் தத்துவத்திற்கு வள்ளுவர் உடன்பட்டவர். ஆயினும் ஊழின் வலிமைக்கு, ஊழின் வழியது வாழ்க்கையமைவு என்பதற்கு அவர் உடன்படவில்லை. ஊழை வெற்றி பெறலாம் என்பதே வள்ளுவர் கண்ட முடிவு. இது, வழிவழியாக மக்களுக்கு வலியுறுத்திக் கூறப்பட்ட ஊழினை மறுத்துக் கூறிய புதுமையாகும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உழைவின்றித்
தாழாது உஞற்று பவர் (620)

'இடைவிடாது சோர்வின்றி உழைப்பு' என உழைப்பிற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர் உழைப்பில் தவழும் திறமும் நாள்தோறும் குறையாமல் வளர வேண்டும் என்பதைத் 'தாழாது உஞற்றுதல்' என்றார்.

மக்கள் கூட்டமாக இணைந்து வாழத் தலைப்பட்டதனாலும், பொருளுற்பத்தி தொடங்கப்பெற்றுத் தனியார் சொத்துக்கள் பெருகி வளர்ந்ததாலும், சொத்துக்களின் அடிப்படையில் மோதல் ஏற்படாமல் தனியாரின் சொத்துடைமைகளைப் பாதுகாக்க அரசாங்கத்தை அமைத்தனர். முதல் அரசு சொத்துடைமை வர்க்கம் அமைத்த அரசேயாகும். அதனால் இன்றும் சொத்துடைமை வர்க்கத்திற்குச் சாதகமாகவே அரசுகள் இயங்கி வருகின்றன. திருவள்ளுவர் நல்லதைச் 'செங்கோல் அரசு' என்றும், மக்களுக்கு நன்மை செய்யாத அரசைக் 'கொடுங்கோல் அரசு' என்றும் கூறுகின்றார். இவ்விரு வகையான அரசுகளும் இன்று உலக நாடுகளில் மாறி மாறிக் கோலோச்சுகின்றன.

செங்கோன்மை (அதிகாரம்.55), கொடுங்கோன்மை (அதிகாரம்.56), வெருவந்த செய்யாமை (அதிகாரம்.57), கண்ணோட்டம் (அதிகாரம்.58), ஒற்றாடல் (அதிகாரம்.59), படைச்செருக்கு (அதிகாரம்.78) ஆகிய திருக்குறளின் அதிகாரங்கள் அரசுக்கேயுரியன; மற்றவை அரசவைக்கும் மக்களுக்கும் உரியன; ஆயினும் செங்கோன்மை, கொடுங்கோன்மை ஆகிய இரண்டினையும் இருவகை அரசுகளாகவும், மேலே சுட்டிக்காட்டிய பிற அதிகாரங்களை அரசுக்குரிய கருவிகளாகவும் கொள்ளலாம்.

அரசியல் மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு தத்துவம் ஆகும். அரசியல் என்பது வாழும் முறை; கொள்கை வழிப்பட்ட வாழ்க்கை முறை. அரசியலே சமுதாய வாழ்க்கைக்கு ஒழுங்கமைதியைத் தருகின்றது. ஒருவர் வாழும் முறைமைகளுக்கும் அரசியலே வழிவகுத்துத் துணை செய்கின்றது. "திருவள்ளுவர் தோன்றிய நூற்றாண்டுக்கு முந்திய நூற்றாண்டுகளில் உலக நாடுகளில் பல்வேறு அரசியல் சிந்தனையாளர்கள் தோன்றியுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கன்பூசியஸ், சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சிகரோ ஆகியோராவர், கௌடில்யர் செய்த அர்த்தசாஸ்திரம் வட இந்தியாவில் ஆட்சி நூலாக இருந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் திருவள்ளுவருக்கு முன்பு சீரான அரசியல் கோட்பாடுகளை முறைப்படுத்தி நூல் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. ஆயினும் மிகச்சிறந்த அரசியல் நெறிமுறைகள் தமிழகத்தில் இருந்தன. தமிழக அரசுகள் மிகச்சிறந்த

பேரரசுகளாக இருந்ததை வரலாற்றின் வாயிலாக உய்த்துணரலாம். தமிழக மன்னர்கள் சங்க காலத் தமிழறிஞர்களின் அறிவுரை வழியும், வழிவழியாக வந்த மரபுகள் வழியும் நல்லாட்சி செய்தனர் எனத் தெரிகிறது" (குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை, திருக்குறள், தொகுதி-1, பக்.171,172) இதனால் சங்ககால அரசியலைத் தெற்றென அறியலாம்.

வள்ளுவரின் அரசியல் கொள்கைக்கு அறமே ஆதாரமாகும். மனிதகுலப் பொருளியல் ஒழுக்கமுறைகளை ஒழுங்குபடுத்தி வளம், வறுமை என்னும் வேறுபாடுகளைப் போக்கிப் பொருளின் காரணமாகத் தோன்றும் ஒழுக்கச் சிதைவுகளை நீக்கி, நிறையான ஒரு சமுதாயத்தைப் படைக்கத் தோன்றும் அரசியலுக்குப் பொருளியலே அடிப்படையாகும். அதனால்தான் திருக்குறள் பொருட்பால் அரசியலைப் பேசுகின்றது. மனிதகுல வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து அரசும் அரசியலும் பேசப்படுகின்றன.

தமிழகத்தில் முடிமன்னராட்சி செங்கோலாட்சியாகவே விளங்கியது. அது இங்கிலாந்து, பிரான்சு நாட்டு மன்னர்கள் ஆட்சியைப் போல விழுமிய சிறப்புடையது. திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் முடியாட்சியே இருந்தமையால் அவர் அறத்தொடு கூடிய முடியாட்சியை ஏற்றார். குடிமக்கள் அரசைத் தழுவி வாழும் நெறி சிறந்த அரசியல் நெறியாகாது. மக்கள் அரசைத் தழுவி வாழ்ந்தால்தான் வாழ்வு கிடைக்கும் எனில் அது கொடுங்கோன்மையாகும். குடிமக்களைத் தழுவி அரசும் அரசாங்கமும் இயங்கும்போதே மக்கள் உரிமையுடையவர்கள் என்பது வள்ளுவச் சிந்தனையாகும்.

ஆட்சியை மக்கள் தக்க அமைச்சர்கள் மற்றும் பெரியோர் ஆலோசனை கொண்டும் துணைகொண்டும் நடத்த வேண்டும். அரசையும் ஆட்சியையும் அதன் நடைமுறைகள் குறித்து விமர்சனம் செய்ய வள்ளுவம் உரிமை வழங்குகிறது. அரசின் தவறுகளை எடுத்துக்கூறிக் கடிந்துரைக்கும் அமைச்சர்கள் இல்லாதுபோனால் அந்த அரசும் பகைவர் இல்லாமலேயே அழியும்.

இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் (448)

இடித்துரைத்தல் என்பது தடம்புரண்ட ஆட்சியாளரைத் தடுத்து நிறுத்தி நல்வழியில் செலுத்துதலாகும். இதனை, இக்காலத்தில் எதிர்க்கட்சியினர் செய்து வருகின்றனர். இது, ஆட்சியாளர்கள் செவிக்குக் கசப்பாக இருக்கலாம். ஆயினும் ஆட்சியாளர்கள் இதனைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு (389)

முறையாக நடைபெறாத ஆட்சியை மக்கள் மாற்றலாம்; மாற்ற முடியும்; ஆட்சியாளர்கள் ஆட்சியை இழப்பர் என வள்ளுவம் அரசியல் மாற்றத்திற்கும் உரிமை வழங்குகின்றது.

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்

சூழாது செய்யும் அரசு (554)

இதனால் வள்ளுவம் முடியாட்சியில் குடியாட்சியை விழைவதைக் காணலாம்.

நெறிசார்ந்த அறிவியல்

உயிர்களுக்கு அறிவு பிறப்பினால் அமைவதன்று. அறிவுடையவாதல் இயற்கையும் அன்று. அறிவைப் பெறுதல் முயற்சியின் பலனாகும். வள்ளுவம் 'கற்றனைத்தூறும் அறிவு' என்கின்றது. கற்றலே அறிவு வாயிலாகும். 'கசடறக் கற்பவை கற்றால்' அறிவினைப் பெறலாம். இப்படிக் கற்ற அறிவு சார்ந்த கருத்துகளை வாழ்க்கையில் பின்பற்றவும் வேண்டும். அதுவே முழுமைபெற்ற அறிவாகும்.

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார் (140)

'எனைத்தானும் நல்லவை கேட்க' எனக்கூறும் வள்ளுவம் கேட்பனவெல்லாம் அறிவினைத் தாரா என்கின்றது. கேட்பனவற்றுள் மெய்ப்பொருளைத் தேர்ந்து தெளிதல் வேண்டும்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

அறிவு உயிர்க்குத் துன்பம் வராமல் பாதுகாக்கிறது. அறிவு என்னும் கருவியைக் கொண்டு வினைப்பகையை வெல்ல வேண்டுமாயின் உயிர்க்கு உயிரொழுக்கமாகிய அன்பு தேவை. உயிரின் இருப்பு அன்புக்காகவே. உயிர், உடம்பாகிய கருவியைப் போர்த்திக் கொண்டது அன்புடையவராக வாழ்வதற்கே. 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறது வள்ளுவம். இவை வள்ளுவத்தின் நெறிசார்ந்த அரசியல் சிந்தனைகளாகும்.

உலக சமாதானம்

வள்ளுவம் உலக அமைதிக்கான சிந்தனைகளைப் பல குறட்பாக்களில் வலியுறுத்திக் கூறுகின்றது.

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய் (851)

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை (852)

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும் (853)

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின் (854)

இக்குறட்பாக்களின் வாயிலாக வள்ளுவத்தின் சமாதானம் என்னும் உலக அமைதிச் சிந்தனைகளை அறிந்து கொள்ளலாம். போரைத் தவிர்த்தலே வள்ளுவத்தின் நோக்கமாகும். போர் தவிர்க்க முடியாது என்றாகிவிட்டால் வலிமையுடையாருடன்தான் போர் செய்ய வேண்டும். வலியற்றவர் மீது போர்தொடுத்தல் கூடாது. மெலியார்மேல் போர்தொடுத்தால் சான்றாண்மை சறுக்கும். ஒழுக்கம் கெடும். தம்மின் வலியார்மேல் போர்தொடுத்தால் தமக்கே அழிவு வந்து சேரும். எனவேதான் 'பகைத்திறம் தெளிதல்', 'பகைமாட்சி' என்றெல்லாம் அதிகாரங்கள் கூறிப் போர் தொடுத்தலுக்குக் கூட நெறிமுறைகளை வகுத்துச் சமாதானத்தையே விரும்புகின்றது.

உலக நாடுகளிடையே வள்ளுவநெறியில் சமாதானக் கொள்கை பொதுக் கொள்கையாக ஏற்கப்பட வேண்டும். உலக நாடுகள் படை மற்றும் ஆயுதக் குறைப்புகளைச் செய்ய வேண்டும். இன்று உலக வல்லரசு நாடுகள் ஒருபுறம் சமாதானம் பேசுகின்றன. மறுபுறம் அணு ஆயுதப் பெருக்கம் செய்கின்றன.

மக்கள்தொகைப் பெருக்கம்

குடும்பக்கட்டுப்பாடு, மக்கள்தொகைப் பெருக்கத்தைக் குறைத்தல் ஆகியன குறித்த சிந்தனைகளும் வள்ளுவத்தில் நாகரிகமாகப் பேசப்பெற்றுள்ளன. நினைத்தலிலும் காண்டலிலும் இன்பம் பெறும் சிறந்தவர்களே காதல் நன்மக்கள் ஆவர்.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு (1281)

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும் (785)

புணர்ச்சி இல்லாத காதலை வள்ளுவம் வலியுறுத்துகின்றது. இன்றோ புணர்ச்சி இல்லாமல் காதல் இல்லை. புணர்ச்சி வேட்கை தணிந்து நெஞ்சு நிறைந்த காதலில் மக்கள் திளைத்து மகிழ வேண்டும் என்பதுதான் வள்ளுவநெறியாகும். இந்நெறியைப் பின்பற்றினால் நிச்சயமாக உலக நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் குறைந்து அன்பு நிறைந்த குடும்பங்கள் பெருகும் என்பதை அறியலாம்.

போர்வெறியும் நாட்டுவெறியும்

நாட்டுப் பற்றுடன் வாழலாம்; ஆனால் நாட்டு வெறியுடன் வாழக்கூடாது. உலக இலக்கியங்களில் திருக்குறள் மட்டுமே போர்வெறியையும் நாட்டு வெறியையும் தூண்டாத இலக்கியமாகும். திருக்குறள் படித்தால் நாட்டுப்பற்று வளரும் என்பதில் ஐயமில்லை. எல்லைப் பிரச்சினைகளில் சிக்கிச் சீரழியும் நிலப்பரப்புக்களைக் கொண்ட நாடுகளை வள்ளுவம் நாடு என்று போற்றவில்லை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார் (399)

என்னும் போர்வெறி, நாட்டுவெறியைத் தூண்டாத ஒருலகக் கொள்கையையே வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

கூட்டுறவு

கூட்டுறவு, மக்கள் இயக்கமாக வளர வேண்டும். கூட்டுறவு இயக்கங்களில் அரசியல் கட்சிகளின் தலையீடும், அரசு அதிகாரங்களின் ஊடுருவலும் கூடாது. இதனால் அரசின் தொடர்பும் மேற்பார்வையும் தணிக்கையும் கூடாது என்பதல்ல; கூட்டுறவைப் பொறுத்தவரையில் அரசின் அணுகுமுறைகள், குடியரசின் அடிப்படையிலான குடிமக்களின் நல்லிணக்க வாழ்க்கைக்கும் கூட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும் மேலாண்மை நிர்வாகத்திற்கும் பயிற்றுவித்து வழிகாட்டக் கூடியதாக அமைதல் வேண்டும். மக்களும் கூட்டுறவைத் தங்களுடையதாகவும் பொதுநலத்திற்குரியதாகவும் ஏற்று ஒத்திசைந்து வாழ்தல் வேண்டும். கூட்டுறவில் தனிநலத்திற்கும் பொதுநலத்திற்கும் இடையே மோதல் ஏற்படும் போது பொது நலத்திற்கே முதன்மை கொடுக்க வேண்டும். தன்னலத்தில் பொதுநலம் அடங்காது. பொதுநலத்தில் தனிமனித நலனும் சமூக நலனும் நாட்டின் நலனும் அடங்கும். இதனையே வள்ளுவர்,

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும் (214) என்றார்.

உடன்பாட்டுச் சிந்தனைகள்

திருக்குறளில் எதிர்மறைச் சிந்தனைகளே இல்லை எனலாம். குறள் ஓர் அறிவியல் நூல்; அது உளவியலைச் சார்ந்த அறிவியல் நூல். மனித நேயமுடையவர்களும் பிறர் நலன்களுக்காகச் சிந்திப்பவர்களும் வாழ்வாங்கு வாழ விரும்புபவர்களும் யார் ஒருவர்க்கும் எவ்வுயிர்க்கும் கொடுமை இழைக்க மாட்டார்கள். மாறாகப் பிறர்செய்த தீங்குகளையும் மறப்பார்கள்; அவர்களை மன்னிப்பார்கள். தமக்குத் தீங்கு செய்தவர்களைப் பழிவாங்க வேண்டுமானால் அவர்களுக்கு நன்மையைச் செய்க என்னும் உடன்பாட்டுச் சிந்தனையை வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல் (314),

எப்போதும் கெட்டவர்களை, ஆற்றொணாச் சினத்தில் மூழ்கி இருப்போரைத் திருத்துவதற்குரிய முதல்விதி அவர்களை மறுக்காமல் முதலில் அவர்களுடன் கொஞ்சம் உடன்பட்டு நிற்றலாகும். முதலில் கெட்டவர்களின் நம்பிக்கையைப் பெறுதல் வேண்டும். அதன்பின்னர் அவர்கள் நாம் சொல்வதைக் கேட்பார்கள்; திருந்துவார்கள்; அவர்களுடைய வாழ்க்கையும் பயனுடையதாக அமையும் என்பதே வள்ளுவ நெறியாகும்.

மரணம் வாழ்க்கையின் விபத்தா?

வாழ்க்கை என்ற தொகுதிக்குரிய விபத்தாகிய மரணம் வரும்போது உலக மக்கள் அனைவரும் பயப்படுகின்றனர்; அழுகின்றனர். மரணத்திலிருந்து தப்பிக்கவே முயல்கின்றனர். ஆயினும் இந்த வாழ்க்கை என்ற தொகுதியின் பகுதியாகிய ஒரு வினாடி கடந்து செல்லும்போது யாரும் துணிவதில்லை; கவலைப்படுவதில்லை. ஏன்? சாவாகிய மரணம் என்பது ஒருநாளில் வருவதில்லை. நாள்தோறும் மரணம் வருகிறது. நொடிதோறும் மரணம் வருகின்றது. மரணத்தை நோக்கி மெல்ல மெல்ல மக்கள் நகர்கின்றனர். இதனை,

நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின் (334)

என்னும் குறட்பாவினால் அறியலாம்.

நாகரிகம்

'நாகரிகம்' என்பதை ஒருவகையான ஒழுக்கம், கட்டுப்பாடு எனக் கருதலாம். இன்று நாகரிகம் என்ற சொல் கொச்சைப்படுத்தப்பெற்று வருகின்றது. இன்றைய நாகரிகம் நம்முடையத் தோலைக்கூடத் தொடவில்லை. புறத்தோற்றங்களே நாகரிகம் என்று போற்றப்படுகின்றன. வள்ளுவ நெறியில் நாகரிகம் என்பது அதிநுட்பமானது. மனித சமூகத்தில் மக்கள் அனைவரும் ஒரேமாதிரியாக நடந்து கொள்வதில்லை. நாட்டின் சமூக அமைப்பு மகாபாரதம் போலவே அன்றுமுதல் இன்றுவரை தொடர்கின்றது. அதாவது, நல்லவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நம்முடன் பல நாள்கள் பழகிய நட்பினராயினும், ஒரு சின்ன நிகழ்வுக்கூட மனம் புழுங்கிப் பகைமை உள்ளம் கொண்டு பழிவாங்க நினைத்து நஞ்சினைக் கொடுக்கின்றனர். அப்படி நஞ்சினைக் கொடுத்தாலும் நஞ்சை உண்பதே நனி நாகரிகம் என்பதை நற்றிணை,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் (355:6,7)

எனப் பேசுகின்றது. இதனையே வள்ளுவம்,

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (580)

என்கின்றது.

தொடரும் .....

இளங்கோவின் உள்ளம்

மு.இளங்கோவன்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்),
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க்கல்லூரி மதுரை -1.

சென்ற இதழின் தொடர்ச்சி .. ..

நாடகக் காப்பியம் எனும் உள்ளம்

இளங்கோவடிகள் காப்பியத் தொடக்கத்தில் திங்கள், ஞாயிறு, மாமழை ஆகிய இயற்கைப் பெரும் பொருள்களை வாழ்த்துகின்றார். மேலும், பூம்புகார் நகரமும் வாழ்த்தப்படுகின்றது.

"திங்களைப் போற்றுகின்றோம்! ஏனெனில், அது சோழ மன்னனது வெண்கொற்றக் குடைபோன்று உலக மக்களுக்கு வேற்றுமையின்றி அளி செய்தலால்.

சூரியனைப் போற்றுகின்றோம்! ஏனெனில், அது சோழ மன்னனது ஆணைச் சக்கரம் போலப் பொன்முடி கொண்ட மேருமலையை வலமாகச் சுற்றுவதனால்.

பெருமழையைப் போற்றுகின்றோம் ஏனெனில், அஃது இந்தப் பேருலகிற்குச் சோழனது தண்ணளி போன்று, வானத்திலிருந்து மழையாகப் பெய்து வளத்தைச் சுரப்பதனால்.

பூம்புகாரைப் போற்றுகின்றோம்! ஏனெனில், இவ்வுலகில் சோழமன்னன் குலத்தொடு பொருந்தியிருந்து புகழ் பெற்று விளங்குவதனால்" (கோ.பார்த்தசாரதி, சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள், பக்.12,13.)

சிலப்பதிகாரம், ஒரு நாடகக் காப்பியம் என்பதை இளங்கோவின் உள்ளத்தின் மூலமே மெய்ப்பிக்கலாம். காப்பியம்,

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்.....
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்....
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்...
பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்....

எனத் (1:1,4,7,10) தொடங்குகின்றது. இவ்வடிகள், நாடகம் தொடங்கும் முன் நாடகப் பாத்திரங்கள் கூட்டு வழிபாடு நிகழ்த்துவது போல அமைந்துள்ளன. திங்களை முதலில் கூறுவதன் மூலம், இளங்கோவின் உள்ளம் நாடகம் இரவில் தொடங்கும் என உணர்த்த விரும்பியது எனலாம். மேலும், கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை ஆகியனவும் நாடகப் போக்கிலேயே அமைந்துள்ளன.

கண்ணகியை அருந்ததியாகக் காணும் உள்ளம்

"கண்ணகியின் கற்புப் போன்றது அருந்ததியின் கற்பு என்ற கருத்தினை உடைய, "தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்" என்ற பகுதிக்கு உரை கூறுவார் போன்று கம்பர் "சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவே" (கம்ப. சித்திரக்கூடம்-16) என்று இராமபிரானே விளிப்பதாக அருளியுள்ளார். ஒரு பெண்ணின் கற்பினைப் பிற பெண்டிர் போற்றுவதினும் அவள் கணவன் போற்றுதலே சாலச் சிறந்ததாகும். அவனே, நெருங்கிப் பழகித் தன் மனைவியின் பண்பினை உணர்தற்குரியவன். எனவே, ஈண்டு கம்பர், சீதையின் கற்பு மேம்பாட்டினைப் பற்றி அவள் கணவனாகிய இராமனே இவ்வாறு பாராட்டுவதாக அமைத்துள்ளார். கற்பொழுக்கம் என்றால் என்ன என்று அறியுமாறு அருந்ததிக்கும் கற்பித்தருளிய திருவே என்பது கருத்து. இராமனுக்குச் சீதையிடம் இவ்வளவு நம்பிக்கை இருந்தமையால்தான், இராவணன் வஞ்சனையாக அவளைக் கவர்ந்து சென்றபோதும் அவள் கற்பில் ஐயங்கொள்ளாமல் அவள் பொருட்டாக இராவணனுடன் அரும்போர் புரிந்து வென்று அவளை மீட்டான் என்பது வரலாறு. இது கம்பரின் ஆற்றல்மிகு கவித்திறன் ஆகும். கண்ணகியை அருந்ததியாகக் கூறும் இளங்கோவின் உள்ளம் இவ்வாறாகக் குறிப்பிடுவதை நாம் அறிய முடிகிறது" (ம.பொ.சிவஞானம், சிலப்பதிகாரத் திறனாய்வு, ப.154)

அருந்ததி நட்சத்திரம், விண்ணில் உள்ளதாகும். இதனைக் கற்பொழுக்கம் நிறைந்த பெண்ணாகப் பாவிப்பர். 'அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்' மரபாகும். கண்ணகியை, அருந்ததியாகக் காணும் இளங்கோவின் உள்ளத்தை, "அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை" எனும்(1:63) அடியால் அறியலாம். விண்ணுலக அருந்ததியை மண்ணுலகக் கண்ணகிக்கு ஒப்பிட்டு இளங்கோவின் உள்ளம் கருதக் காரணம் அவளைப்போல இவளும் விண்ணுலகில்

நிலைபெறுவாள் என்பதாலேயே ஆகும். எனவேதான், குற்றமற்ற சிறப்பினை உடையவளாகக் கண்ணகியைக் கருதிய இளங்கோவின் உள்ளத்தை 'அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை' என்னும் (1:63) அடியால் அறியமுடிகிறது. மேலும், குற்றமற்ற சிறப்பினை உடையவளாகக் கண்ணகியைக் கருதிய இளங்கோவின் உள்ளமானது "வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம்" எனவும் (3:175) எண்ணியது.

பத்தினியைத் தெய்வமாகக் கருதிய உள்ளம்

"மதுரைக் காண்டத்தின் இறுதியிலே அமரர்க்கரசர் வந்து, கண்ணகியின் காதலனை அவளுக்குக் காட்டி இருவரையும் வானுலகத்திற்கு அழைத்துச் சென்றார் என்று கூறுகின்றார். வஞ்சிக் காண்டம் முழுவதும் கண்ணகித் தெய்வத்தின் வழிபாட்டை வற்புறுத்துவதற்கென்றே எழுதப்பட்டதாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்.50)

என்ற திருவள்ளுவரின் கூற்றுப்படி அதையே இலக்கணமாகக் கொண்டு நிலவுலகில் அறக்கற்பையும் மறக்கற்பையும் கடைப்பிடித்து வாழ்ந்த கண்ணகியை 'வானுலகத்துத் தெய்வம்' என்று கூறும் போது இளங்கோவின் உள்ளத்தை இங்கு காணமுடிகின்றது. மேலும், மனிதர் யாரும் பண்போடும் பிறருக்குப் பயன்படும் நெறியோடும் எவ்வுயிருக்கும் அஞ்சாது நீதிக்குப் போராடும் உணர்வோடு வாழ்ந்தால் அவரையே மக்கள், தெய்வமாகக் கொண்டாட வேண்டும் என்ற உண்மையைக் கண்ணகி மூலம் நமக்கு உணர்த்தியிருக்கிறார் இளங்கோவடிகள். (கோ.பார்த்தசாரதி, சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள், ப.248)

செங்குட்டுவன் கண்ணகியின் புகழை இமயம்வரைப் பரப்பி அப்பத்தினிக்குக் கல்லெடுத்தான்; கோயில் கண்டான்; விழா எடுத்தான். இவைகளெல்லாம் நடந்த பின்னரே இளங்கோவின் உள்ளம் சிலப்பதிகாரம் இயற்ற இயங்கியது. இப்படிக் கருதுவதற்குக் கண்ணகியை, 'கொங்கு நாட்டின் விலைமதிப்பற்ற செல்வி, குடமலை நாட்டை ஆளும் செல்வி, தென்தமிழ் நாட்டின் பாவை, உயர்ந்தோர் செய்த தவக்கொழுந்து, உலகிற்கெல்லாம் ஒப்பற்ற மாணிக்கம் போல ஒளியைத்தரும் தெய்வமகள்' எனவெல்லாம் புகழ்வதே

போதுமானதாகும். கொற்றவை (ஐயை,காளி,துர்க்கை) கோயிலில் இருந்த கண்ணகியின் பிற்காலப் புகழை,

"இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென் தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி..."

எனத் (12:47-50) தெய்வமகள் சாலினி மூலம் இளங்கோவின் உள்ளம் முன்னரே பார்க்கின்றது. இதன்மூலம், பன்னாடுகள் கண்ணகிக்குப் பெருமைகளைச் செய்த பின்னரே இளங்கோவின் உள்ளம் காப்பியம் பாடியது என அறியலாம். 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' (பதிகம்:56) எனவும், 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' (25:114) எனவும் வரும் அடிகள் இங்கு பொருத்திப் பார்ப்பதற்கு உரியன.

இளங்கோவின் நல் உள்ளம்

காப்பியத்தின் நிறைவுப்பகுதியில், தமிழ் மக்களின் நலன்களை மட்டும் நாடாது, உலக மக்களை, அவர்தம் நலன்களையும் நாடும் தம் உயர்ந்த உள்ளத்தை இளங்கோவடிகள் புலப்படுத்தியுள்ளார். எச்சமயமும் சாராது எல்லாச் சமயங்களும் ஏற்கும் பண்புகளைப் பாங்குடன் புலப்படுத்தும் நல்உள்ளம் உடையவராகவும் உயர்கின்றார். இவ்வாறு துணிவதற்கு, 'பிறர்க்குத் தொல்லையும் துன்பமும் செய்யாது நீங்குங்கள்; தெய்வம் உண்டென உணருங்கள்; உயர்ந்தோரைப் போற்றி வழிபடுங்கள்; பொய் பேசாதீர்கள்; புறங்கூறாதீர்கள்; ஊன் உண்ணாதீர்கள்; உயிர்க்கொலை செய்யாதீர்கள்; தானம் புரியுங்கள்; தவம் செய்யுங்கள்; செய்ந்நன்றி மறவாதீர்கள்; தீயோர் நட்பை விலக்குங்கள்; பொய் சாட்சி சொல்லாதீர்கள்; பயன் நிறைந்தவைகளைக் கேட்பதில் இருந்து நீங்காதீர்கள்; நல்லோர் அவையினைத் தேடி அடையுங்கள்; தீயோர் அவையிலிருந்து தப்பிப் பிழையுங்கள்; பிறர்மனை விரும்பாதீர்கள்; துன்பமுற்ற உயிர்களைக் காப்பாற்றுங்கள்; இல்லறத்தை விரும்புங்கள்; பாவச்செயல்களை வெறுத்து ஒதுக்குங்கள்; கள், களவு, காமம், பொய், பயனற்ற சொல் ஆகியவற்றை ஒழிக்கும் வகையறிந்து ஒழியுங்கள்; இளமையும் செல்வமும் உடலும் நிலையற்றவை; ஆகையால், இறந்த பின் செல்லும் மறுமை உலகிற்கு உற்றதுணையாகிய அறத்தைச் செய்யுங்கள் எனவெல்லாம் கூறுவதே

போதுமானவைகளாகும். இவ்வாறு, உலக மக்களுக்கு வழிகாட்டும் அன்பு உள்ளத்தை, எல்லாரையும் அரவணைக்கும் அன்னை உள்ளத்தை,

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்உரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின் ;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறன்மனை அஞ்சுமின்; பிழைஉயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்குஎன்

என (30:186-202) சிலம்புத்தமிழ் சிறப்பிக்கின்றது. இதன் மூலம் பொதுமையை விரும்பும் இளங்கோவின் புலமையையும் அறியலாம்.

முடிவுரை :

மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் பாடாத புலவரின் உள்ளமில்லை; அப்படிப் பாடாவிட்டால் அவரிடம் உள்ளமே இல்லை எனலாம். காந்தியடிகள் தம் உள்ளக்கிடக்கையை வாழ்க்கை வரலாறாக முதலில் குசராத்தி மொழியில் எழுதிப் பின்னர் அவரே

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தாகூர் தம் கவிதை உள்ளத்தை 'கீதாஞ்சலி' எனும் கவிதை நூலாக வங்கமொழியில் எழுதி, பின்னர் அவரே ஆங்கிலத்தில் பெயர்த்து நோபல் பரிசு பெற்றார். காந்தி, தாகூர் இருவரின் மொழிப்பற்றுள்ளத்தை ஒருங்கே இளங்கோ அறிந்து முன்னரே பெற்றுள்ளார் என பெருமிதம் ஏற்படுகின்றது. சிலம்புத் தமிழைப் பன்முறைப் பயின்று இளங்கோவின் உள்ளத்தை எல்லாரும் பெற்றால் அதுவே செந்தமிழுக்கும் செந்தமிழ் நாட்டுக்கும் சிறப்புச்சேர்க்கும்.

பார்வை நூல்கள்

1. சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும்-ஓர் ஆய்வு, அ.சீனிவாசன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,மு.ப.2008.
2. சிலம்பில் அரும்பிய சிந்தனைப் பூக்கள், கோ. பார்த்தசாரதி, சேகர் பதிப்பகம், திருச்சி,2011
3. சிலப்பதிகார ஆராய்ச்சி, வெ. சுப்பிரமணிய ஆச்சாரியர், சேகர் பதிப்பகம், சென்னை,2011.
4. சிலப்பதிகாரச் சிந்தனைகள், வே.இரா. மாதவன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்,2004
5. சிலப்பதிகாரம் (ஆய்வுக் கோவை), இராம. குருநாதன், ப.முத்துக்குமாரசுவாமி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2004.
6. சிலப்பதிகாரத் திறனாய்வுகளின் வரலாறு, க.பஞ்சாங்கம், அன்னம், தஞ்சாவூர்,மு.ப.2010.
7. சிலப்பதிகாரச் சிந்தனைகள், சு.பார்வதி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
8. சிலப்பதிகாரத் திறனாய்வு, ம.பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.
9. சிலப்பதிகாரம் (தெளிவுரை), ஞா. மாணிக்கவாசகன், உமா பதிப்பகம், சென்னை-2009.

சங்கச் செய்திகள்

07.10.2019 அன்று 'கலைமகள் விழா' சங்க வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு மற்றும் கல்லூரிக்குழு உறுப்பினர்கள், முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

07.10.2019 அன்று காரைக்குடியில் நடைபெற்ற வீறுகவியரசர் முடியரசனார் நூற்றாண்டுத் தொடக்க விழாவில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை இரண்டாமாண்டு மாணவி த.கார்த்திகா 'வீறுகவியரசர் முடியரசனார் விருது' பெற்றார்.

10.10.2019 அன்று காலை 10.00 மணியளவில் மனிதநேய பாதுகாப்பு அமைப்பும் நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து நடத்திய 'தேசிய நுகர்வோர் விழிப்புணர்வு தின விழா' வைரவிழா அரங்கில் நடைபெற்றது. மதுரை மேற்கு சரக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கண்காணிப்புக்குழு உறுப்பினர் ச.அசோகன் தலைமை வகித்தார். விழாவை சென்னை உயர்நீதி மன்ற மேனாள் நீதிபதி எஸ்.விமலா தொடங்கி வைத்து, 'நுகர்வோர் சட்டவிதிகளும் விளக்க உரைகளும்', 'உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம்' என்ற நூல்களை வெளியிட, மதுரை மத்திய கலால் துறையின் இணை ஆணையர் வி.பாண்டியராஜா பெற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில் வி.பாண்டியராஜா 'ஜி.எஸ்.டி' என்ற தலைப்பிலும், சென்னை சமூகப் பாதுகாப்புத் துறை இணை இயக்குநர் சு.தனசேகரபாண்டியன் 'பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு' என்ற தலைப்பிலும், மதுரை உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் ச.ஆ.சோமசுந்தரம் 'உணவுக் கலப்படம் பற்றிய விழிப்புணர்வு' என்ற தலைப்பிலும், வட்டாட்சியர் சோ.பாலாஜி 'பெண்களுக்கான தொழில் வளர்ச்சி வாய்ப்பு விழிப்புணர்வு' என்ற தலைப்பிலும் மதுரை மற்றும் ராமநாதபுரம் சரக போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு துணைக் கண்காணிப்பாளர் ராமகிருஷ்ணன் 'இன்றைய சமுதாயத்தில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு' என்ற தலைப்பிலும், மதுரை மாவட்ட சமூகநலத்துறை

பாதுகாப்பு அலுவலர் வாசுகி 'சமூகநலத்துறையின் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோருக்கான திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர். மதுரை மனிதநேயப் பாதுகாப்பு அமைப்பின் சார்பாக நமது கல்லூரிக்கு ஆறு கணினிகள் வழங்கப்பட்டன. நுகர்வோர் விழிப்புணர்வுக்கான பேச்சு, கவிதை, ஓவியம், கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு பதினைந்து மாணவ, மாணவியர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழும் விருதும் வழங்கப்பட்டது.

14.10.2019 அன்று 'கீழடி - தமிழர்களின் தொன்மை' என்னும் பொருண்மையில் சிறப்புக் கருத்தரங்கம் வைரவிழா அரங்கில் நடைபெற்றது. முதல்வர் முனைவர் கி.வேணுகா வரவேற்றார். சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் ராணி.ந.இலட்சுமி குமரன் சேதுபதி வாழ்த்துரை வழங்கினார். இந்தியத் தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தமது சிறப்புரையில், "கீழடி அகழாய்வுப் பணிகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக உலக அளவில் தற்போது கீழடி பற்றிப் பேசப்பட்டு வருகிறது. சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட தமிழர்கள் குறித்த செய்திகள் அனைத்தும் கற்பனையே என்று கூறியவர்களின் கூற்றை, கீழடி அகழாய்வு பொய்யாக்கி உள்ளது. கீழடியில் பத்து சதவீத அளவுக்கே அகழாய்வு நடந்துள்ளது. தமிழரின் வரலாற்றைக் கட்டமைக்கக் கீழடியில் முழுமையான விரிவான அகழாய்வுக்கு இன்னும் பதினைந்து ஆண்டுகள் தேவை. வைகை மட்டுமின்றி அனைத்துத் தமிழக ஆறுகளிலும் ஆய்வு தேவை" என்று உரைத்தார். கீழடி அகழாய்வு தொடர்ந்து நடைபெறக் கோரி வழக்குத் தொடுத்த சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் கனிமொழி மதி பேசும்போது, "தமிழ்ச் சமூகம் நாடோடிகள், எப்படி இலக்கியம் எழுதி இருக்க முடியும் என்பவர்களுக்குக் கீழடியே ஆதாரம். தமிழர்கள் ஓரிடத்தில் தங்கி விவசாயம் செய்து நகர நாகரிகமாக இருந்துள்ளனர் என்பதற்குச் சான்றாகக் கீழடி இருக்கிறது. கீழடி பற்றிய முக்கியத்துவம் அறிந்து அதற்கான ஆய்வைத் தடைபடாமல் தொடர வழக்குத் தொடர்ந்தேன்.

கீழடி அகழாய்வுப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட இடமாக அறிவிக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார். கீழடி அகழாய்வுக்கு நிலம் வழங்கிய உரிமையாளர்கள் மற்றும் கீழடி தொல்லியல் ஆய்வு குறித்த நூல்களான ‘வைகைநதி நாகரிகம்’ எழுதிய சு.வெங்கடேசன், ‘மண்மூடிய மகத்தான நாகரீகம்’ எழுதிய அமுதன் (எ) தனசேகரன், ‘கீழடி தமிழ் இனத்தின் முதல் காலடி’ எழுதிய நீ.சு.பெருமாள், ‘தமிழகத் தொல்லியல் ஆய்வுகள் கீழடி வரை’ எழுதிய சி.இளங்கோ, ‘கீழடி மதுரை ஓர் அறிமுகம்’ எழுதிய க.த.காந்தியரசன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். கருத்தரங்கின் இரண்டாம் அமர்வில் செந்தமிழ் இதழ் ஆசிரியர் இரா.சதாசிவம், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ந.நன்மாறன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திறனாய்வுத் துறை மேனாள் தலைவர் தி.சு.நடராசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இக்கருத்தரங்கில் தமிழ் அறிஞர்கள், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

15.10.2019 அன்று காலை 10.00 மணியளவில் சுந்தர ராமசாமியின் நினைவு நாளை முன்னிட்டு ‘கதைகேளு கதைகேளு’ என்னும் நிகழ்வு பாண்டியன் நூலகத்தில் நடைபெற்றது. இதில் சுந்தர ராமசாமியின் சிறுகதைகளைக் காணொளிக் காட்சியில் எழுபது மாணவர்கள் கண்டு ரசித்தனர். இந்நிகழ்வினை நூலகர் தி.பிருந்தா ஒருங்கிணைத்தார்.

கவியரசர் கண்ணதாசனின் நினைவு நாளை முன்னிட்டுப் பாண்டியன் நூலகத்தில் அன்னாரது படைப்புகள் மற்றும் திறனாய்வு நூல்கள் 16.10.2019 முதல் 18.10.2019 வரை வாசகர்களின் பார்வைக்கும் பயன்பாட்டிற்கும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா கண்ணதாசனின் வாழ்க்கை வரலாறு மற்றும் சிறப்புகள் குறித்து உரையாற்றினார். நூலகர் தி.பிருந்தா இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

17.10.2019 அன்று கல்லூரியில் தேசிய மாணவர் படை அணி தொடக்கவிழா கல்லூரி வைரவிழா அரங்கில் நடைபெற்றது. சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் கி.வேணுகா வரவேற்றார். கர்னல் ஜூட்

பகதூர் மற்றும் தேசிய மாணவர் படையின் ஏழாவது பட்டாலியனைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கல்லூரி உதவிப் பேராசிரியரும் தேசிய மாணவர் படையின் திட்ட அலுவலருமான முனைவர் சா.கணேசன் நன்றி கூறினார்.

22.10.2019 அன்று நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக நிலவேம்பு கசாயம் சங்க வளாகத்தில் வழங்கப்பட்டது. முதல்வர் முனைவர் கி.வேணுகா தலைமை தாங்கினார். நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை மற்றும் முனைவர் மா.செல்வத்தரசி ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

23.10.2019 அன்று நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல்வர் முனைவர் கி.வேணுகா தலைமை தாங்கினார். மகப்பேறு மற்றும் நுண்துறை அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஜோதிலெட்சுமி கருத்துரை வழங்கினார். நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் மா.செல்வத்தரசி வரவேற்புரையும், முனைவர் பூ.பூங்கோதை நன்றியுரையும் வழங்கினர்.

29.10.2019 அன்று மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் இருக்கையின் சார்பாக முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான கவிதைப் போட்டியில் செந்தமிழ்க் கல்லூரி முதுகலை இரண்டாமாண்டு மாணவி த.கார்த்திகா முதல் பரிசாக ரூபாய் இரண்டாயிரமும், பேச்சுப் போட்டியில் மூன்றாம் பரிசாக ரூபாய் ஆயிரமும் பெற்றார்.

31.10.2019 அன்று நாட்டுநலப்பணித் திட்டத்தின் சார்பாக முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியை நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் பா.நேருஜி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

திசம்பர் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வள்ளல் பொன்.
பாண்டித்துரைத் தேவர்
(டிச.2)



கவியரசு
முடியரசன்
(டிச.3)

ந.பிச்சமூர்த்தி
(டிச.4)

கல்கி
(டிச.5)



கலாநிதி கைலாசபதி
(டிச.6)

நா.பார்த்தசாரதி
(டிச.13)



நாவலர் சோமசுந்தர
பாரதியார்
(டிச.14)

சு.செல்லப்பா
(டிச.18)

கி.ஆ.பெ
விசுவநாதனார்
(டிச.19)

பா.வே.மாணிக்க
நாயக்கர்
(டிச.25)

ராஜாஜி
(டிச.25)

மன்னர் பாசுகர
சேதுபதி
(டிச.27)

தமிழண்ணல்
(டிச.29)

தொ.மு.சி.ரகுநாதன்
1923-2001
(டிச.31)

பதிப்பாசிரியர்: **பேராசிரியர் திரு. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. தி.முருகரத்தினம்

முனைவர் திரு. **இராம.சுந்தரம்**

முனைவர் திரு. **ம.திருமலை**

முனைவர் திரு. **இ.மறைமலை**

முனைவர் திரு. **செ.கந்தசாமி**

முனைவர் திரு. **பெ.சுயம்பு**

முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**

முனைவர் திரு. **மு.மணிவேல்**

முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**

முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**

முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 Postal Registration Number TN/MA/130/2017-19
Date of Publication 20th of Every Month
Posted at Madurai BPC on 25th of Every Month

தமிழ்ச்சங்க மாதிரித் தேர்வு அறிவிப்பு

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தால் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு அரசுப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறவும், கூடுதல் மதிப்பெண்கள் பெறவும் வழிகாட்டியாக தமிழ்ப்பாடம் மாதிரித் தேர்வு சங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு முதல் மாநில பாடத்திட்டத்தில் கூடுதலாக பதினொன்றாம் வகுப்பிற்கும், மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கும் மாதிரித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இத்தேர்வில் கலந்து கொள்ளும் மாணாக்கர்களுக்கு சங்கத்தால், சான்றிதழும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் மாணாக்கர்களுக்கு எதிர்காலத்தில் பெரும் பயனுள்ளதாக இருக்கும். இந்த ஆண்டிற்கான சங்கத் தேர்வுகள் மாநில மற்றும் மத்திய பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பிற்கு 11.01.2020-ஆம் நாளன்றும், பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கு 10.01.2020-ஆம் நாளன்றும் நடைபெறவுள்ளது. மாணாக்கர்கள் அனைவரும் இத்தேர்வில் கலந்துகொண்டு பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்புநர்,
செயலாளர்
நான்காம் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
The Fourth Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: செந்தமிழ் அச்சகம், 54, தமிழ்ச்சங்கச் சாலை, மதுரை- 1